DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 120/2019

Prosecution witness PW - 2

| | | |
|---|---|---|
| Name | .... | Kumaresan |
| Father's Name | .... | Krishnamoorthy |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | .... | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 15th day of July 2025.

முதல் விசாரணை

நான் பெரிய ஏழச்சேரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். நான் கூலிவேலை செய்துவருகிறேன். 2015 ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஒரு நாள் காலை 11.00 - 11.30 மணி இருக்கும், நான் காஞ்சிபுரத்தில் இருந்தேன். அப்போது என் பெரியப்பா மகன் தயாளன் எனக்கு தொலைபேசியில் பேசினார். அ.சா.1 எங்கே என்று கேட்டபோது அவர் அ.சா.1ஐ சிட்டிபாபுடன் அனுப்பி வைத்தேன் என்று சொன்னார். அதன்பிறக என் மாமா ஏழுமலை எனக்கு போன் செய்தார், அவரிடமும் நான் சிட்டிபாபுடன் அனுப்பி வைத்திருக்கிறேன் என்று சொன்னேன். அதன்பிறகு சிட்டிபாபு என் அம்மாவை அடித்து நகைகள் மற்றும் இருசக்கர வாகனத்தை எடுத்துசென்றுவிட்டார். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் டி.என். 25 ஏஆர் 0614 ஆகும். அதன்பிறகு என் அம்மாவை ஆம்புலன்ஸில் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு

அழைத்துசென்றோம். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றுவிட்டபார்கள். அதன்பிறகு சிட்டிபாபுவை தேடிசென்றோம் அவர் அங்கு இல்லை என்று சொன்னார்கள். அதன்பிறகு தூசி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். அதன்பிறகு மருத்துவமனையில் என் அம்மாவிடம் விசாரணை செய்தார்கள். இது சம்மந்தமாக என்னையும் போலிசார் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 120/2019

Prosecution witness PW - 1

Name .... Allipappa
Father's Name .... Krishnamoorthy
Village ....
Taluk ....
Caste ....
Calling ....
Religion ....
Age ....

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 15th day of July 2025.

முதல் விசாரணை

நான் பெரிய ஏழச்சேரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். நான் சிட்டிபாபு மீது புகார் கொடுத்தேன். சித்திரை மாதம் 2015 ஆம் வருடம் மதியம் 12.00 மணிக்கு மாத்தூர் ஏரி கலங்குமேடை அருகில் புதுவீடு கட்டுவதற்காக சில ஆவணங்களை ஜெராக்ஸ் எடுக்க சொன்னார்கள் அதற்காக போகியிருந்தேன். அப்போது சிட்டிபாபு வந்திருந்தார். அவர் என் மகனுடன் வேலை பார்ப்பவர். சம்பவ இடத்தில் என்னை சிட்டிபாபு கல்லால் வலது தலை பக்கம் அடித்தும், என்னை கீழே தள்ளி மேலா ஏறிஉட்கார்ந்துவிட்டார். அதன்பிறகு நான் அணிந்திருந்த ஒரு ஜதை நதியா கம்மல், தோடு, ஒரு மூக்குத்தி ஆகியவற்றையும் மற்றும் ரூ.5000/- நான் வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டார். பிறகு நகை கழற்றாவிட்டால் கொன்றுவிடுவேன் என்று சொன்னார் நான் பயந்துகொண்டு நகை, பணம் கொடுத்துவிட்டேன். அதன்பிறகு

எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். எனக்கு படிப்பறிவில்லை அதனல் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியாது. நான் அதன்பிறகு அழுதுக்கொண்டே ஏரிவழியாக சென்றேன். எனக்கு அடித்ததில் இரத்தம் வந்தது. தயாளன் என்னுடைய மூத்தார் மகன், அவர் தான் என்னை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். நான் ஒருவாரம் உள்நோயாளியாக இருந்தேன். போலிசார் மருத்துவமனையில் இருக்கும்போது என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றனர். அந்த வாக்குமூலத்தில் உள்ள கைநாட்டு என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் மேற்படி சம்பவத்தால் எனக்கு வலது கண் பார்வை தெரியவில்லை.அதேபோல எனக்கு சொந்தமான வழக்கு சொத்துக்களை நான் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். வழக்கு சொத்துக்கள். 1) சுமார் 2கிராம் எடையுள்ள ஒரு ஜதை பொன் கம்மல், **(சா.பொ.**1**)** 2) சுமார் 1கிராம் எடையுள்ள 1 ஜதை நதியா பொன் கம்மல், **(சா.பொ.2) 3)** சுமார் 7 மி.கி எடையுள்ள ஒரு மூக்குத்தி (திருகாணி இல்லை) **(சா.பொ.3)** மற்றும் ரூ5000/- என்னிடம் கொடுத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

இல்லை.